மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தந்தக் கல்லூரி களில் பணியாற்றும் பேராசிரியர்கள்தான் அதிலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

*417 Q.—Thiru N· K. Palanisamy : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether it is a fact that there are no sufficient number of qualified teachers for B. com., courses in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ : இப்பொழுது துவக்கப்பட்டுள்ள வகுப்புகளுக்குப் போதுமான அளவு பேராசிரியர்கள் இருக்கிறார்கள். புதிய நியமனங்களுக்குத் தேவைப்படும் வகையில் எம்.காம். பட்டதாரிகள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த எம்.காம். பட்டதாரிகளில் நல்ல வகுப்பு எடுப்பவர்களுக்குத்தான் பேராசிரியர் பதவி கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே சி. பிளஸ், பி. பிளஸ் எடுத்து பாஸ் செய்தவர்கள் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, எம்.காம். பட்டதாரிகளில் சற்று தகுதி குறைவாக இருந்தாலும், அவர்களுக்கும் பேராசிரியர் பதவி கொடுக்க அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போதுமான அளவுக்கு தகுதி பெற்றவர்கள் கிடைக்காத நேரத்தில் அவர்களுக்குக் கல்வித் தகுதி ஓரளவிற்குத் தளர்த்தப்படுகிறது. தளர்த்துவதற்கு அவசியம் இல்லாத நேரத்தில், தளர்த்துவது இல்லை. ஆங்கிலப் பயிற்சிக்கும், பி.காம். பயிற்சிக்கும் அந்தக் கல்வித் தகுதி இல்லாதவர்கள் என்ற நிலை ஏற்படுகிற போது சி. பிளஸ், பி. பிளஸ் வாங்கியவர்களையும் எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்குத் தளர்த்துகிறோம்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இப்போது பி.காம். படித்தவர்கள் குறைவாக இருப்பதால், பி.காம். வகுப்பு பாடங்கள் எடுக்க ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள். கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் மாலை நேர வகுப்புகளில் எம்.காம். பயிலக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதேபோல், இங்கே தொழில் துறையில் இருப்பவர்கள் படிக்க வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலும், ஆசிரியர்கள் பற்றாக் குறையைக் குறைக்கும் வகையிலும் எம்.காம். வகுப்பு மாலை நேரத்தில் படிக்க வசதி ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் கருத்தை வேண்டுமானால் மாநில அரசு பல்கலைக்கழகங்களுக்கு பரிந்துரை செய்யலாம். அது பற்றி முடிவு எடுக்க வேண்டியது பல்கலைக்

1975 மார்ச் 22]

கழகங்கள்தான். பல்கலைக் கழகங்கள் அது குறித்து முடிவு எடுக்குமானால், மாலை நேர வகுப்பு தொடங்குவது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாலை நேர வகுப்புகளை தற்போது சென்னையில மட்டும் நடைபெறுவதாக அறிகிறேன். அதை மாவட்ட தலைநகரங்களாகிய திருச்சி, கோவை போன்றயிடங்களில் விரிவுபடுத்த அரசு பரிசிலிக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முக்கியமான நகரங்களில் இருக்கின்றன என்று நினைக்கிறேன். தனிக்கேள்வி போட்டால் முழுமையான விவரம் தர ஆயத்தமாக இருக்கிறேன். திருச்சி, மதுரை, கோவை போன்ற இடங்களில் இருப்பதாகக் கருதுகிறேன். இப்போது முழுமையான விவரங்கள் இல்லை. அங்கேயில்லாவிட்டால், அப்படி ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறதா என்பதை ஆராயலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பி. காம். பட்டப்படிப்புக்கு அதிகமான டிமாண்ட் இருக்கிறது. காரணம் வங்கிகள் அதிகமாக அதிகமாக பி. காம். பட்டதாரிகள் அதிக அளவில் தேவைப்படுகிறார்கள். ஆகவே, அதற்கான அளவில் கல்லூரிகளில் இடத்தைப் பெருக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றித்தான் நான் முதலிலேயே குறிப்பிட்டேன். பி.காம். வகுப்புகளுக்கு வசதி செய்து தரப்படுகிறது. அதுகுறித்து, பல்கலைக்கழகங்களையும் நாம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஏனென்றால், பி. காம். படிக்க விரும்புகிறவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. வரலாற்றுத்துறை, பொருளாதாரத்துறை ஆகியவற்றிற்கு ஆகும் செலவு தான் இதற்கு ஆகிறது. இதை அதிக அளவில் ஆரம்பிக்காததற்குக் காரணம் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்று குறிப்பிட்டேன். அந்த வகையில்தான் எம். காம். வகுப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இரண்டு மூன்று ஆண்டுகளில் பல கல்லூரிகளில் அவர்களை நியமிக்கலாம் என்ற அடிப்படையில் செய்யப்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்கள் எங்கெங்கே வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்களோ, அங்கே தரவேண்டும் என்று அரசு பரிந்துரை செய்து இருக்கிறது.

Visual Education in Schools.

* 418 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) the names of schools in Madras City where Visual Education is imparted as a part of study at present; and

(*b*) the results achieved thereby?